

குரும்பசிட்டியை பிறப்பிடமாகவும்

சுதுமலை வடக்கை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட

# அமரர் பரமேஸ்வரி வேலுப்பிள்ளை அவர்களின்


# நினைவு மலர்

01.07.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



குரும்பசிட்டியை பிறப்பிடமாகவும்
சுதுமலை வடக்கை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட

## அமரர் பரமேஸ்வரி வேலுப்பிள்ளை

அவர்களின்

# நினைவு மலர்

**01.07.2015**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# சமர்ப்பணம்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
அன்புடனும் பாசத்துடனும்
எம்மையெல்லாம் அரவணைத்து
இன்று வானுறையும் தெய்வத்துள்
அடைக்கலம் பெற்று நிற்கும்
எமது அன்புத் தெய்வம்
அமரர் வேலுப்பிள்ளை பரமேஸ்வரி
அவர்களின் ஆத்ம சாந்திக்காக
எல்லாம் வல்ல அருள்மிகு குரும்பசிட்டி
முத்துமாரி அம்பாளினதும் அருள்மிகு
சுதுமலை புவனேஸ்வரி அம்பாளினதும்
அருட்கடாட்சம் நாடி
இம்மலரினை சமர்ப்பிக்கின்றோம்.

**இங்ஙனம்**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜனனம்
17-12-1929

மரணம்
01-06-2015

அமரர்

# பரமேஸ்வரி வேலுப்பிள்ளை

அவர்கள்

(மன்மத வருடம் வைகாசிமாதம் வளர்பிறை சதுர்த்தசி திதி)

## திதி வெண்பா

மன்மத ஆண்டது மருவிய வைகாசித் திங்கள்
முன்னிரவு வளர்பிறையாம் சதுர்த்தசி சேர் அனுசமதில்
பொன்பூத்த குரும்பை நகர் பெற்ற பரமேஸ்வரி யம்பாள்
சந்நிதியில் சரணடைந்தார் காண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்களான
வேலுப்பிள்ளை பரமேஸ்வரி தம்பதியினர்



தோற்றம் : 16.05.1928
மறைவு : 15.01.2007



தோற்றம் : 17.12.1929
மறைவு : 01.06.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

நத்தார்படை ஞானன்பசு ஏறிந்நனை கவிழ்வாய்
மத்தம்மத யானை உரி போத்தமண வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தார்எலும் பணிவான்திருக் கேதீச்சரத் தானே.

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்தஎம் பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைப்பேன்
ஆண்டநீ யருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே! உலப்பிலா வொன்றே!
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிர்வளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே!
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்(று) அருள்
செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

ஏறுமயி லேறிவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியரு ணாசலம் அமர்ந்தபெரு மாளே!

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறையரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான் மறையறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள்ள சைநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குரும்பசிட்டி அருள்மிகு சித்திவிநாயகர் தாள் பணிந்து பிரார்த்திப்போம்

சித்தி நாயகன் திருமலர்ப்பாதம் - எம்
சிந்தையில் கலந்தே ஒலித்தது கீதம்
ஓம் என்னும் பிரணவ வேதம் ஓங்கி
ஒலித்திடப் பிறந்தது குரும்பை நகர் மணிநாதம்

(சித்தி நாயகன்)

வேள முகத்தோன் திருக்கரங்கள் - என்றும்
வெவ்வினை நீக்கி அளித்திடும் நல் வரங்கள்
நீள நினைந்தடி போற்ற என்றும்
நிலைத்திடும் குரும்பை நகர் மண் நின் பதங்கள்

(சித்தி நாயகன்)

ஆய கலை கல்வி செல்வம்
ஆகிவிடும் கருமங்கள் யாவையும் வெல்லும்
தூய நின் மலரடி துதிக்க என்றும்
துணை நின்றிடும் குரும்பை நகர் மண் நின்பதங்கள்

(சித்தி நாயகன்)

வல்லப கணபதி நாமம் வாய்
சொல்லிடப் போகும் முன்வினை
நல்லன நல்கிடும் எங்கள்
நாயகன் நாமம் நாளுமே சரணம்

(சித்தி விநாயகன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரும்பசிட்டி அருள்மிகு முத்துமாரி அம்பாள் தாள் பணிந்து பிரார்த்திப்போம்

அம்மா என்றழைத்தாலே போதும் - எங்கள்
ஆதிபராசக்தி முகம் தோன்றும்
ஜெகமாளும் எமதன்னை ஜெகதீஸ்வரி
குரும்பை நகர்மேவி அருள்சுரந்த மகமாரி நீ
(அம்மா என்றழை)

உன்கோயில் மணியோசை கேட்கும் - எங்கள்
உளமெல்லாம் உன் பாதம் லஜிக்கும்
மாதோட்ட நகர் தந்த பரமேஸ்வரி
குரும்பை நகர் மேவி அருள் சுரந்த மகமாரீ நீ
(அம்மா என்றழை)

திரு நாளாம் திருவெம்பா தேர் உற்சவம்
திருவூஞ்சல் நீ காணும் தீர்த்தோற்சவம்
பெறும் பேறு பெற்றோம் எங்கள் புவனேஸ்வரி
குரும்பை நகர்மேவி அருள் சுரந்த மகமாரி நீ
(அம்மா என்றழை)

ஊர் கலைந்த போதும் மக்கள் உளம் நாடினாய்
உனை மறந்த அடியார்க்கும் நலம் தேடினாய்
இடர்தாங்கி எமைக்காத்த சிவனேஸ்வரி
குரும்பை நகர் மேவி அருள் சுரந்த மகமாரி நீ
(அம்மா என்றழை)

ஊர் மீண்டும் வந்தோம் நீ தனியாய் நின்றாய்
உனைக் கண்ட அடியார்தம் உளத்தை வென்றாய்
ஊர் கூட உனக்கென்றோர் தலமும் கண்டாய்
குரும்பை நகர் மேவி அருள் சுரந்த மகமாரி நீ
(அம்மா என்றழை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் பரமேஸ்வரி வேலுப்பிள்ளை அவர்கள்

யாழ் மண்ணின் கலை கலாச்சார விழுமியங்களுக்கு அணி சேர்த்து நின்ற கிராமங்களில் குரும்பசிட்டி கிராமமும் ஒன்றாகும். இற்றைக்கு முப்பது வருடங்களுக்கு முன்னான காலப்பகுதிகளில் கலை வளத்தால் கவினுறு தொழில் வளத்தால், பொருள் வளத்தால் இலங்கைத் தீவின் பல பாகங்களையும் தொட்டு நின்ற கிராமம் குரும்பசிட்டி அத்தகைய கிராமத்தின் பெருமையில் அங்கு வாழ்ந்த உறவாடிய உள்ளங்கள் யாவும் ஏதோ ஒரு விதத்தில் பங்கு கொண்டவர்களாவர். எதனையும் கலாரசனையுடன் நோக்கும் மனப்பாங்கு கொண்ட மக்கள் கூட்டத்தை சுமந்து நின்ற அந்த செம்மண் பிரதேசத்தின் பொற்காலம் மறக்க முடியாத ஒன்றாகும்.

இன்று தவிர்க்க முடியாததொரு இடப்பெயர்வின் நீண்டகால இடைவெளிக்குப்பின் கிராமத்தின் இயல்பான வளங்கள் யாவும் சிதைக்கப்பட்ட நிலையில் மீண்டும் மிடுக்குற துடித்து நிற்கும் வேளையில் எம்மண் சுமந்த உறவு அமரர் வேலுப்பிள்ளை பரமேஸ்வரி அவர்களின் பிரிவு அன்னாரையும் அவர் வாழ்ந்த காலப்பகுதியையும் நினைவு கூர வைத்து நிற்கிறது.

வாழ்ந்தால் எம்மண்ணில் வாழ வேண்டும், எம் கிராமத்து உறவுகளுடன் கூடி உறவாட வேண்டும், இறந்தால் எமது கிராமத்து சுடலையில் எமது உடல் சாம்பலாக வேண்டும் என்ற உணர்வுடன் காலத்தைக் கழித்து ஒவ்வொரு ஆண்டாக எதிர்பார்த்து எமாந்த உறவுகளில் அமரர் வேலுப்பிள்ளை பரமேஸ்வரியும் ஒருவராகிவிட்டார் என்பதனை இங்கு வேதனையுடன் குறிப்பிட்டாக வேண்டும்.

குரும்பசிட்டி கிராமத்தின் தொழில் வளத்தில் குடிசைக் கைத்தொழிலாக உருவாகி வளர்ச்சி கண்ட தொழில் சுருட்டு கைத்தொழிலாகும். இத்தொழில் துறையில் ஈடுபாடு கொண்டிருந்த முயற்சியார்களில் குரும்பசிட்டியை சேர்ந்த விஸ்வலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னத்தங்கம் தம்பதியினரின் மூத்த மகளே அமரர் பரமேஸ்வரி ஆவார். 17.1.1929ம் ஆண்டு பிறந்த இவர்தம் சகோதரர்கள் அமரர் பாலச்சந்திரன் திரு புவனேந்திரன் அமரர் பரராஜசிங்கம், செல்வி மகேஸ்வரி ஆகியோர் ஆவர். திரு புவனேந்திரன் அவர்கள் ஆசிரியப் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர் இவர் சுதுமலை வடக்கைச் சேரந்த வேலுப்பிள்ளை திருச்செல்வம் தம்பதியினரின் மகள் புவனேஸ்வரி அவர்களை வாழ்க்கைத் துணையாக கரம் பிடித்து இல்லறவாழ்வின் பயனாக லக்சாயினி, லக்ஸ்மன், சுபோஷினி ஆகிய புதல்வர்களைப் பெற்று அமரர் அவர்களுடன் உறவாட வைத்தவர்.

இதே போன்று அன்னாரது சகோதரி செல்வி மகேஸ்வரி அவர்களும் ஆசிரிய பணிபுரிந்து ஓய்வு பெற்றவர் அமரர் பரமேஸ்வரியுடன் இணை பிரியாது வாழ்ந்து நல்லதொரு அக்காவின் உறவுடன் தாய்ப் பாசத்தையும் அவர் ஊடாக அனுபவித்த பேறு பெற்றவர்.

அமரர் பரமேஸ்வரி அவர்கள் தனது ஆரம்ப கல்வியை குரும்பசிட்டி பொன்பரமானந்தர் வித்தியாலயத்தில் பெற்றார். தன் சகோதரர்களுடனும் கிராமத்து உறவுகளுடனும் நெருக்கமாக வாழ்ந்தவர் உரிய பருவத்தில் குரும்பசிட்டியை சேர்ந்த இராமலிங்கம் சின்னத்தங்கம் தம்பதியினரின் மகன் வேலுப்பிள்ளை அவர்களை 4.9.1959ம் ஆண்டில் திருமணம் புரிந்தார் இவர்களது இல்லறவாழ்வின் பயனாக திரு வேணுதாஸ் அவர்களை செல்வப் புதல்வனாக அடையும் பாக்கியம் தம்பதியினருக்கு கிடைத்தது. தற்பொழுது ஜேர்மனியில் வாழ்ந்து வரும் திரு வேணுதாஸ் அவர்களுக்கு மாரீசன் கூடலைச் சேர்ந்த சின்னத்தம்பி புவனேஸ்வரி தம்பதியினரின் புதல்வி தவரஞ்சிதமலர் அவர்களை திருமண பந்தத்தில் இணைய வைத்து தாய்க்குரிய கடமையை நிறைவேற்றிய வகையில் மன நிறைவுடன் வாழ்ந்தவர் அமரர் அவர்கள். இவரது கணவர் வேலுப்பிள்ளை அவர்கள் இடம் பெயர்ந்த காலத்தில் நோய் வாய்ப்பட்டு 15.01.2007ம் ஆண்டில் இறைவனடி சேர்ந்தார்.

அமரர் பரமேஸ்வரி அவர்கள் எல்லோரிடமும் அன்புடனும் பண்புடனும் பழகும் விதத்தில் எல்லோரது மனங்களிலும் இடம் பிடித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டவர். கிராமமக்கள் அவரை வயதுவேறுபாடின்றி "பரமேசக்கா" என்றே அழைப்பது வழக்கம் பரமேசக்கா அவர்களின் துடிப்பான வேகமான நடை அவருக்கென ஒரு தனித்துவத்தை கொடுத்திருந்தது எனலாம். கிராமத்தில் இடம்பெற்ற பல விளையாட்டுப் போட்டிகளில் வேகநடை நிகழ்வில் பங்கு கொண்டு பரிசில்களை தட்டிக் கொள்ளும் இவர் சிறுவர்களையும் பெரியவர்களையும் மனமகிழ வைத்து நிற்பார்.

அவரது தன்னலம் கருதாத பணிகள் அவரது உடலில் தெம்பு இருக்கும் வரை எமது கிராமத்து மக்களுக்கு கிடைத்த வண்ணம் இருந்தமை இங்கு நினைவு கூரத்தக்க ஒன்றாகும். தான் கிராமத்தில் வாழ்ந்த காலத்திலும் இடம் பெயர்ந்த காலத்திலும் ஊரவர்களின் இன்ப துன்ப நிகழ்வுகளில் பங்கு கொண்டு முன்னின்று பணிபுரிவார் குறிப்பாக பெண்களின் மரணச்சடங்குகளின் போது கிரியைகளுக்குரிய ஆயத்தப் பணிகளை முன்னின்று கவனிப்பதுடன் குளிப்பாட்டல், உடை உடுத்தல் என்பவற்றில் அவரது பணியை ஊரே எதிர்பார்த்து நிற்கும். இதே போன்று மரணச் சடங்கை தொடர்ந்து நடைபெறும் செலவு (8க்கு வைத்தல்) அந்தியோட்டி நிகழ்வுக்கான நடவடிக்கைகளை முறையாக செய்வதுடன் இப்பாரம்பரிய முறைகளை இளைய தலைமுறைகளுக்கு எடுத்து விளக்குவதிலும் அவரது பணிகள் தனித்துவமானவை.

திருமண விழாக்கள், பூப்புனித நீராட்டு வைபவங்கள் போன்ற மங்கல நிகழ்வுகளில் ஆராத்தி எடுத்தல் வேப்பிலை சுற்றிபோடுதல் போன்றவற்றில் ஒரு அனுபவமிக்க பெண்மணியைப் போன்று செயற்படும் அவரது நடவடிக்கைகளை கிராமமே அங்கீகரித்து நின்றது என்றால் அது மிகையாகாது.

அமரர் பரமேஸ்வரி அவர்கள் கிராமத்தில் வாழ்ந்த காலத்தில் குரும்பசிட்டி அருள்மிகு முத்துமாரி அம்பாள், குரும்பசிட்டி அருள்மிகு சித்தி விநாயகர் ஆலயங்களில் வழிபாடுகள் செய்தும் கற்பூரச் சட்டி ஏந்தியும் அடியளித்தும் வேண்டுதல்களை நிறைவேற்றும் வழக்கத்தை கொண்டிருந்தார். இடப் பெயர்வு நிலையில் சுதுமலை வடக்கில் நீண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலமாக வசித்து வரும் வேளையில் சுதுமலை அருள்மிகு புவனேஸ்வரி அம்பாளை நினைந்துருகி மன ஆறுதல் பெற்று நின்றனர்.

கனிவான பேச்சு, பிறரையும் அரவணைத்து செல்லும் மனப்பாங்கு, பிறருக்கு உதவும் பண்பு, எதிலும் பதட்டப்படாது அமைதியான முறையில் விடயங்களை அணுகும் முறை, எவருடனும் கோபம் கொள்ளாது ஒருவரைக் கண்டதும் தலையசைத்து புன்முறுவல் செய்து தொடர்பு கொள்ளும் திறன் இந்த பண்புகள் தான் நாம் அவரிடம் இருந்து பெற்றுக் கொண்ட பாடங்கள்.

அமரர் பரமேஸ்வரி வேலுப்பிள்ளை அவர்கள் நோய்வாய்ப்பட்டு சிலகாலங்கள் இருந்த போதும் தம்மைப் பார்க்க வரும் உறவினர்கள், நண்பர்கள் இடத்தில் மனம் கோணாது இறுதிவரை உரையாடி வந்தவர். இந்தவ கையில் அவரது இறுதிக்காலம் பாரிய உபாதைகள் எதுவுமின்றி நிறைவுற்றதென்றே கூறிக்கொள்ளலாம் இது அவரின் நல்லதையே எண்ணி நல்லதையே செய்து வந்தமைக்கு கிடைத்த நற்பயன் என்று நமக்கொல்லாம் உணர்த்தி நிற்கின்றது.

நற்கதி பெற்ற அந்த நல்ல உள்ளத்தின் ஆத்மா சாந்திக்காக இம்மலர் கொண்டு பிரார்த்திப்போமாக.

**ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரும்பசிட்டி வளர்மதி சன சமூக நிலையத்தின் பிரார்த்தனை

மானிடப்பிறவி அரியது மகத்துவமானது அந்த மகத்துவம்,வாழ், வாழவிடு, அயலவனையும் அரவணைத்துச் செல் என்ற எண்ணக்கருக்களுக்கு உயிரூட்டும் வாழ்க்கை முறையிலே தங்கியிருக்கிறது. ஏதோ பிறந்தோம் வாழ்ந்தோம் இறந்தோம் என்றில்லாமல் நாம் வாழும் காலத்தில் ஏதாவது நல்ல காரியத்தை செய்யப் பழகிக் கொள்ள வேண்டும் இத்தகைய வாழ்க்கை முறையினாலே நாம் வாழும் போது மதிப்பையும் இறந்த பின்னர் புகழையும் இந்நிலவுலகுக்கு விட்டுச் செல்லாம்.

எமது செயற்பாடுகள் பின்னைய சந்ததிக்கு ஒரு முன் உதாரணமாக அல்லது வழிகாட்டியாக நினைவு கொள்ளத்தக்க வகையில் அமையுமாயின் அதுவே எமது வாழ்வின் பயனாக அமையும் என்பது நிச்சயமானது.

இந்த வகையில் எமது கிராமத்து மண்ணில் பிறந்து வாழ்ந்து எம்மைவிட்டுப் பிரிந்த அமரர் வேலுப்பிள்ளை பரமேஸ்வரி அவர்கள் தன் உடலில் தெம்பு இருந்த வரை தானும் வாழ்ந்து அயலவரையும் அரவணைத்து அவரகளின் இன்ப துன்ப நிகழ்வுகளில் நல்லதையே செய்த பெருமைக்குரியவர்.

அவர்விட்டுச் சென்ற பண்புகள் எமக்கு முன்னுதாரணமாக எமக்கு துணை புரியும் அன்னாராது ஆத்மா சாந்திக்காக கிராம மக்களுடன் இணைந்து நாமும் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!**

நீரிலோர் குமிழி தோன்றி நில்லாமல் அழிதல் போல
வானிலோர் வர்ணம் தோன்றி வளராமல் மறைதல் போல
மானிட வாழ்வும் தோன்றி மறைந்திட முன்னர் நீங்கள்
நானிலம் போற்ற நாலு நல்லவை செய்தே வாழ்வீர்.

**- குரும்பசிட்டி வளர்மதி சனசமூகநிலையம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சங்கத்தினரின் பிரார்த்தனை

எந்தையும் தாயும் அவர் முன்னையோர் பலரும் கூடிக்குலாவிய எமது மண்ணின் பாரம்பரியங்களை கட்டிக் காத்து தந்த கிராமத்து பெரியார்களை நாம் எளிதில் மறந்து விடமுடியாது.

குரும்ப சிட்டி அருள்மிகு முத்துமாரியம்பாள் அருள்மிகு சித்திவிநாயகர் பெருமான் மற்றும் இக்ஷ்ட குல தெய்வங்களின் அருளாசியில் கலந்த அருட் காற்றை சுவாசித்து வளர்ந்த உள்ளங்களில் அமரர் வேலுப்பிள்ளை பரமேஸ்வரியும் ஒருவர்.

தான் உண்டு தன் குடும்பம் உண்டு என வாழாது தன் உறவுகளைத் தேடி நாடி அவர்களது இன்ப துன்பங்களில் பங்கு கொண்டு தாங்கியும் வாழ்ந்து பழக்கப்பட்டவர் அமரர் அவர்கள்.

அவரது பணிகள் எமது வாழ்வியலுக்கு பெறுமதி சேர்த்தவை எனலாம். அப்பணிகளின் பெறுமதி பணிகளை அனுபவித்தவர்களுக்குத் தான் தெரியும். இந்த வகையில் அன்னாரது பிரிவு ஒரு தாயைப் பிரிந்த உணர்வை எமக்கு ஊட்டி நிற்கின்றது அந்தளவிற்கு அவர் எமது உணர்வுகளில் கலந்த உறவாகி விட்டார்.

அன்னாராது ஆத்மா சாந்திக்காக கிராம மக்களின் சார்பில் அவர்களுடன் இணைந்து பிரார்த்திப்போமாக.

**ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!**

**குரும்பசிட்டி கிராம அபிவிருத்தி சங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேற்றம்

ஆண்டாண்டு தோறு மழுது புரண்டாலும்
மாண்டார் வருவாரோ மாநிலத்தில் - வேண்டாம்
நமக்குமது வழியே நாம் போமளவும்
எமக் கென்னென் றிட்டுண்டிரும்.

இப்பிறப்பை நம்பி இருப்பாரோ நெஞ்சமே
வைப்பிருக்க வாயில் மனையிருக்க - சொப்பனம்போல்
விக்கிப் பற்கிட்டக் கண்மெத்தப் பஞ்சிட்டு அப்பைக்
கக்கிச் செத்தக் கொட்டக்கண்டு.

இன்னம் பிறக்க இசைவையோ நெஞ்சமே
மன்னரிவர் என்றிருந்து வாழ்ந்தாரை - முன்னம்
எரித்த கட்டை மீதில் இணைக்கோ வணத்தை
உரித்துருட்டிப் போட்டது கண்டு.

இருப்பது பொய் போவதுமெய் என்றெண்ணி நெஞ்சமே
ஒருத்தருக்கும் தீங்கினை எண்ணாதே - பருத்ததொந்தி
நம்மதென்று நாமிருப்ப நாய்நரி பேய்கழுகு
தம்மதென்று தாமிருக்கும் தான்

காடோ செடியோ கடற்புமோ கனமேமிகுந்த
நாடோ நகரோ நகர்நடுவோ நலமேமிகுந்த
வீடோ புறந்திண்ணையோ தமினுேடல் விழுந்திட
நீடோய் கழுக்குன்றி லீசா வுயிர்த்துணை நின்பமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மரண வீட்டில் அபக்கிரியைகளை செய்வதற்கு வேண்டிய பொருட்களின் விபரம்**

இந்நாளில் கிரியை செய்யும் போது சைவக் குருக்களே இவற்றைக் கொண்டு வருவார்.

நெல்லு
பச்சையரிசி
பயறு
உழுந்து
எள்ளு
தேங்காய்
தேங்காய் எண்ணெய்
விபூதி
சந்தனம்
குங்குமம்
அபிஷேகக் கூட்டு
மஞ்சள் மா
அரிசி மா
அபிஷேக திரவியம்
பன்னீர்

தேன்
நல்லெண்ணை
அரப்பு
லவரந்தர்
அத்தர்
ஊதுபத்தி
சாம்பிராணி
தசாங்கம்
நெற்பொரி
நவதானியம்
கழிநூற் பந்து
பஞ்சவர்ணநூல்
விளைவு சூடம்
சமித்துக்கட்டு
பட்டுத்துண்டு

குருக்கள் வேட்டி, சால்வை
கும்பவேட்டி 1
முட்டி
சட்டி
செம்பு 13
குடம் 1
குத்துவிளக்கு
உரல் உலக்கை
அறுகம்புல்
மாவிலை, வாழையிலை
கோசலம், கோமயம்
பால், இளநீர்
மான்தோல்
தட்டம்
வேட்டி, சால்வை (கிரியை செய்வோருக்கு) நெய்
வாழைப்பழம்
எலுமிச்சம்பழம்
பழவகைகள்
பாக்கு
வெற்றிலை

இறந்தவருக்கு
வேட்டி, சால்வை
அல்லது
சேலை, சட்டை
கத்தி
தோரணம், கயிறு
தீப்பெட்டி

6m வெள்ளைத்துணி (கோடி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அஸ்தி சஞ்சயன் போது கொண்டு செல்பவை

அரசி மாவை பிசைந்து 7 ரொட்டிகள் செய்து கொண்டு போக வேண்டும் அதோடு பால், தயிர் மய்முட்டி ஒன்று, வாளி, கத்தி, வாழையிலை, தீவத்தி, பழவகை, இளநீர், பாக்கு, வெற்றிலை பூஜைக்குரிய பொருட்கள்.

**அந்தியேட்டிக் கிரியைக்குத் தேவைப்படும் பொருட்கள்**

| | |
|---|---|
| நெல்லு | வெற்றிலை |
| பச்சை அரிசி | பாக்கு |
| பயறு | வாழைப்பழம் |
| உழுந்து | எலுமிச்சம்பழம் |
| எள்ளு | பழவகைகள் |
| தேங்காய் - 20 | அறுகம்புல் |
| கழிநூல் பந்து | பால், தயிர் |
| பஞ்சவர்ணநூல் | கோசலம், கொமயம் |
| விபூதி | இளநீர் |
| குங்குமம் | வாழையிலை |
| சந்தனம் | மாவிலை |
| பன்னீர் | முட்டி 2 |
| அபிஷேகக் கூட்டு | சட்டி 1 |
| அபிஷேகத் திரவியம் | உரல், உலக்கை |
| நவதானியம் | தேங்காயெண்ணெய் |
| நெற்பொரி | சில்லறைப்பணம் |
| நெய் | செம்பு 12 |
| சமித்துக்கட்டு | குடம் 1 |
| விளைவு சூடம் | குத்துவிளக்கு |
| சாம்பிராணி | தட்டம் |
| அரிசிமா | மான்தோல் |
| மஞ்சள் மா | பூ, மாலைகள், சுரப்பந்து |
| நல்லெண்ணெய் | அமுது |
| அரப்பு | பலகாரவகைகள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருக்கள் வேட்டி சால்வை
கும்ப வேட்டி
வேட்டி
பட்டுத்துண்டு
சிகப்புபச்சை
பச்சைமா (புல்லாந்தி இலையை உலர்த்தி இடித்து எடுப்பது)
சிவப்புமா (செங்கல் தூள்)
கரிமா (கரியில் இடித்து எடுப்பது)
2 தானத்திற்கு அரிசி மரக்கறி
செங்கல் - 1
வைக்கோல் 1 கட்டு
கத்தி
தீப்பெட்டி

1 படி பச்சை அரிசி பொங்கல்
3 படி அரசியில் சோறு
கறிவகை

தென்னோலைத் தோரணம்
கயிறு
1m வெள்ளைத்துணி (கோடி)

"எழுதிச் செல்லும் விதியின் கை
எழுதி எழுதி மேற்செல்லும்
அழுது கெஞ்சி நின்றாலும்
தொழுது வேண்டி நின்றாலும்
சூழ்ச்சி பலவும் செய்தாலும்
வழுவிப் பின்னால் நீங்கியொரு
வார்த்தையொன்றை மாற்றிடுமோ
அழுத கண்ணீர் ஆறெல்லாம் அதிலோர்
எழுத்தையேனும் அழித்திடுமோ"

"வினை போகமே யொரு தேகங்கண்டாய்
வினை தானொழிந்தாய்
நினை போதளவு நில்லாது கண்டாய்
சிவன் பாத நினை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்த்தமுள்ள சிரார்த்தம்

தாய் தந்தையர் இறந்த பிறகு எவனொருவன் அந்தக் குறிப்பிட்ட திதிகளில் பிண்டங்களை அவர்களுக்கு சமர்ப்பிக்கின்றானோ அவன் அவர்களால் போற்றப்படுவான். அவர்களின் பெயரால் தான தர்மங்களை எவன் செய்கின்றானோ அவற்றின் பயனை அவன் அடைந்து கொள்கிறான். புண்ணிய காலங்களில் புண்ணியதலங்களில் பிதிர்களைக் குறித்து தான தர்மங்களைச் செய்வதால் அவன் பிதிர்களால் ஆசீர்வதிக்கப்படுவதுடன் எந்தவித துன்பங்களையும் அனுபவிக்க மாட்டான்.

எள் என்பது விஷ்ணுவின் வியர்வையில் தோன்றியதாகையால் எள்ளினை தானங்களோடு சேர்த்துக் கொடுத்தால் அதிக பயன் உண்டாகும்.

அமாவாசையானது அனுசம், விசாகம், சுவாதி அகிய நட்சத்திரங்களில் கூடுமானால் அப்பொழுது செய்கின்ற சிரார்த்தம் பிதிர்களுக்கு திருப்தியைக் கொடுக்கும். திருவாதிரை, பூசம், புனர்பூசம் நட்சத்திரங்களுடன் கூடும் அமாவாசையில் செய்யும் சிரார்த்தம் பன்னிரண்டாண்டுகள் பிதிர்களுக்கு திருப்தியைக் கொடுக்கும். வைகாசி மாத சுக்கிலபட்ச திருதியையும், கார்த்திகை மாத சுக்கிலபட்ச நவமியும், புரட்டாதி மாத மஹாளய அமாவாசை, மற்றும் கிருஷ்ணபட்ச திரதோசியையும் பிதிர்களுக்கு பிரிதியை உண்டு பண்ணுபவை.

சூரிய சந்திர கிரகணங்களின் போது செய்யப்படும் சிரார்த்தம் ஆயிரம் ஆண்டுகள் சிரார்த்தம் செய்த புண்ணியத்தைக் கொடுக்கும்.

சிரார்த்தம் அனுஷ்டிப்பது ஒவ்வொரு இந்துவின் முக்கிய கடனாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய் எங்கள் வாழ்வில் கலந்திருந்து எம்மை விட்டுப் பிரிந்த எங்கள் அன்புத் தெய்வம் அமரர் வேலுப்பிள்ளை பரமேஸ்வரி அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து எம் இல்லத்துக்கு நேரில் வந்து அனுதாபங்கள் தெரிவித்தவர்களுக்கும் தொலைபேசி, தபால் மூலமாக அனுதாபம் தெரிவித்தவர் களுக்கும் மரணச் சடங்கு, இறுதி ஊர்வலத்தில் பங்கு பற்றியோருக்கும் அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளில் கலந்து கொண்டு ஆத்ம சாந்திக்காக பிரார்த்தித்தோருக்கும் மேலும் பல்வேறு உபகாரங்களை அன்புடன் புரிந்து உதவிய உற்றார் உறவினர் நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


இங்ஙனம்
வேணுதாஸ் - தவரஞ்சிதமலர்
(மகன்- மருமகள்)
செல்வி வி.மகேஸ்வரி)
(அன்புச் சகோதரி)
திரு திருமதி புவனேந்திரன் புவனேஸ்வரி
குடும்பத்தினர்
(அன்புச் சகோதரன் மைத்துனி அவர்தம் பிள்ளைகள்)

மதவடி லேன்,
சுதுமலை வடக்கு,
சுதுமலை.

**Guru Printers,** *39/2, Adiyapatham Road, Thirunelvely.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சா வழி




* அமரர்களைக் குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்..



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்.
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டுவந்தாய்
அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை
மற்றொருவருடையதாகிறது
மற்றொருநாள்,
அது வேறொருவருடையதாகும்.

"இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமாகும்"

பகவான்
ஸ்ரீ கிருஷ்ணர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org